சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 302 / 2019

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 24.01.2023 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | அகிலா | கிராமம் : | |
| க/பெ : | பார்த்திபன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல்தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.1

2) குற்ற அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ.2

3) மோட்டார் வாகன பதிவுச்சான்று சான்றிட்டநகல் - ம.சா.ஆ.3

4) மாதிரி வரைபடம் சான்றிட்டநகல் - ம.சா.ஆ.4

5) விபத்து பதிவேடு சான்றிட்டநகல் - ம.சா.ஆ.5

6) இறப்பு சான்று அசல் - ம.சா.ஆ-6

7) பிரேதபரிசோதனை அறிக்கை சான்றிட்டநகல் - ம.சா.ஆ-7

8) இறப்புச்சான்று உண்மைநகல் - ம.சா.ஆ.8

9) வாரிசுச்சான்று இணையதள நகல் - ம.சா.ஆ.9

10) மருத்துவ கட்டண ரசீது அசல் - ம.சா.ஆ.10

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்துசமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரரின் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அமலில் இருந்ததால் 1ம் எதிர்மனுதாரைப் பொருத்து இத்ந மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தான் எங்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்துசமயத்தில் அருகில் இல்லை யாருடைய தவறால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. விபத்துசமயத்தில் எனது கணவர் ஒரு இருச்சக்கர

வாகனத்தில் பின்னால அமர்ந்து பயணம் செய்தார். எனது கணவர் பயணம் செய்த இருச்சக்கர வாகனம் விபத்துசமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் அக்ட் பாலிசி என்ற காப்பீடு ஒப்பந்தம் மட்டுமே செய்திருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த காப்பீடு ஒப்பந்தத்தின் படி இருச்சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்த செல்லும் நபருக்கு ஏற்படும் பாதிப்பிற்-கு காப்பீடு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டதல்ல பொறுப்பல்ல என்றால் சரியல்ல. எங்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் 1ம் எதிர்மனுதாரர் தான் வழங்க /வேண்டும் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு மருத்துவ செலவு ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10 ஆவணம் வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கணவரின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. காப்பீடு ஒப்பந்தத்தின்படி இறந்துபோன நபருக்கு நஷ்டஈடு வழங்க காப்பீடு நிறுவனம் கடமைப்பட்டதல்ல என்பதால் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

ஒம் / அகிலா

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.